# 5000 பிரிட்டிஷார் மகாராணிக்கு மகஜர்

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

**EELANADU**

தபால்பெட்டி எண். 49 · மலர் 10 · இதழ் 92
போன் 389 · **National Tamil Daily** · தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கைய சித்திரை 31 வைகாசி 14 திங்கட்கிழமை (13-5-68)

## பொதுத் தேர்தல் நடத்த கோருகிறார்கள்

லண்டன், மே 12

பிரிட்டிஷ் பார்லிமெண்டைக் கலைத்து புதிய பொதுத் தேர்தலொன்றை நடாத்துமாறு 5,000 பேர் பிரிட்டிஷ் மகாராணியைக் கோரியுள்ளனர். 5,000 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று பக்கிங்ஹாம் அரண்மனையில் எலிசபெத்ராணியிடம் கையளிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸனை ராஜினாமாச் செய்யும்படி லண்டன் பத்திரிகைகள் சிலவும் கோரியுள்ளன.

பிரிட்டனின் பொருளாதாரநிலை சீராக இல்லையென தெரிவித்த தொழிற்கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது. பிரிட்டனின் பொருளாதாரநிலை சீராக இருக்கிறதென்று சொல்லிவந்ததன் மூலம் பிரதமர் வில்ஸன் பிரிட்டிஷ் மக்களை ஏமாற்றிவிட்டார் என பிரிட்டிஷ் வங்கித்தலைவரான அந்தப் பிரமுகர் தெரிவித்திருந்தார்.

# வீடுபுகுந்து சோதனைசெய்யும் அதிகாரிகள் மீது வழக்கு

## நீதிமன்றத்தில் தாக்கல்செய்ய தமிழ்காங்கிரஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

"வடபகுதியின் கடற்கரைப் பிரதேசங்களுக்கு விதிக்கப்பட்ட பொருட்களின் கட்டுப்பாட்டை வாபஸ் பெறுமாறு தமிழ் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் ஏற்காவிட்டாலும் இறுதிவரை அதனை வாபஸ் பெறுமாறு நாம் கோரியே திருவோம். வாபஸ் பெறாவிட்டால் நாம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற போதிலும், வீடுகளுக்குள் பொலிஸாரோ, இராணுவத்தினரோ பிரவேசித்தால் அதற்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து வாதாடுவோம்."

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாடொன்றில் உடுப்பிட்டி எம். பியும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

தமிழ் காங்கிரஸ் கட்சியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் பத்திரிகையாளர் மகாநாட்டில் வடபகுதியின் சில பகுதிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு பற்றி கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்ததாவது:

இக் கட்டுப்பாடு வடபகுதித் தமிழர்களை மட்டுமன்றி இலங்கை வாழ் தமிழ் மக்களையே கள்ளக் கடத்தல் காரர்கள் எனத் கணிப்பதைப் போன்றதாகும். இந்த அநியாய உத்தரவை நாம் ஒரு போதும் ஆதரிபோம். இறுதிவரை எதிர்த்தே திருவோம். இச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறு நாம் விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் வீடுகளைச் சோதனையிட வரும் இராணுவத்தினரையும், பொலிஸாரையும் உள்ளே விடக் கூடாது என பொதுமக்களுக்குப் பிரசாரம் செய்வோம்.

வல்வைத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு அரசாங்கம் வழக்குத் தாக்கல் செய்ய மறுத்த போதும் நாம் அரசாங்கத்திலிருந்து கொண்டே வழக்குத் தாக்கல் செய்தது போல இதிலும் அனுமதியின்றி வீடுகளுக்குள் செல்லும் அரசாங்க ஊழியர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்து வாதாடுவோம்.

பொலிசாரிடமும் இராணுவத்தினரிடமும் [illegible] வாங்கும் பழக்கம் இருக்கும் வரை கடத்தலை இலங்கையின் எந்தப் பகுதியிலுமே ஒழிக்க முடியாதெனவும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் சகல இடங்களையும் சோதனையிடும் அதிகாரம் இவர்களிடம் வழங்கப்பட்டது 'பாலுக்கு பூனையைக் காவல் வைத்த' கதை போன்றதென்றும், பொலிஸ், இராணுவத்தினர் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளை சோதனையிட வழங்கப்பட்டுள்ள அதிகாரம் உடனடியாகரத்துச் செய்யப்படல் வேண்டுமென்றும், இல்லாவிட்டால் தமிழ்க் காங்கிரஸ் தொடர்ந்தும் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதில் பயனில்லாது போய்விடும் என்றும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறிப்பிட்டார். [கா. நி.]

## நண்பனாக நடித்து பெட்டியை திருடியவர் பிடிபட்டார்

### ஓடும் ரயிலில் சம்பவம்

உடுப்பிட்டி, ஞாயிறு

ஓடும் ரயிலில் மணமகனின் பெட்டியைக் களவாடிக்கொண்டு ஓட்டம் பிடித்தவர் கிளிநொச்சி பஸ்நிலையத்தில் பெட்டியும் கையுமாகப் பிடிபட்டார். கொழும்பிலிருந்து தனது திருமணத்திற்காக நண்பர்களுடன் நெல்லியடிக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்த மணமகனொருவரே இவ்வனுபவத்துக்குள்ளானவர்.

பிரஸ்தாப மணமகனும் அவரது ஊர்நண்பர்களும் கொழும்பில் ரயிலேறும் பொழுது அவர்களுடன் நாகரீக உடையணிந்து உத்தியோகத்தர் போல் காணப்பட்ட இளைஞரொருவரும் ரயிலேறினாராம். அவ்விளைஞர் தான் ஒரு கவிஞரென்றும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரென்றும் அறிமுகம் செய்து நட்புப் பூண்டாராம். ரயிலில் நெல்லியடி இளைஞர்களும் அவ்விளைஞரும் நண்பர்கள் போல் பழகி ஒன்றாகவே உணவருந்தினராம். உணவருந்திய பின்னர் அனைவரும் தமாஷாகப் பேசிக்கொண்டிருக்கையில் நாகரீக இளைஞர் மணமகனைப் பார்த்து திரும

(6ம் பக்கம் பார்க்க)

## சைவம்வளர்வதற்கு சமய வாழ்வு வாழவேண்டும்

### இந்துமாமன்ற விழாவில் பேராசிரியர் ஞானசம்பந்தன்

யாழ்ப்பாணம், திங்கள்

"சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் திருநாவுக்கரசர் வாழ்ந்த சமய வாழ்வுக்கு எத்தனையோ வேறுபாடுடைய போலியான சமய வாழ்வில் சைவர் ளாகிய நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சைவம் என்ற சொல்லுக்கே அருகதையற்ற சமய வாழ்வு நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்றால் அது மிகவும் வெட்கக்கேடான செயலாகும். ஆகையால் இனியும் நாம் சைவம் பற்றி அறிவின் துணை கொண்டு ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தால் சைவம் வளராது எனவே எமது அறிவின் துணை கொண்டு சமய வாழ்வு வாழவேண்டும்."

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற இந்து மாமன்ற ஆண்டு விழாவின் மாலை நிகழ்ச்சியின்போது பேசிய பேராசிரியர் திரு. ஆ. ச. ஞானசம்பந்தன் பேசுகையில் தெரிவித்தார்.

வழக்கறிஞர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை தலைமையில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில் 'சமய வாழ்வு' பற்றி பேசுகையில் திரு. ஆ. ச. ஞானசம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:

சமயவாழ்வு அறிவின் துணை கொண்டும் வாழலாம். உணர்வின் துணை கொண்டும் வாழலாம். கண்ணப்பர் உணர்வின் துணை கொண்டு சமய வாழ்வை மேற்கொண்டார். சிவகோசரியார் அறிவின் துணை கொண்டு சமய வாழ்வைப் பின்பற்றினார். இதனால் கண்ணப்பன் ஆறுநாளில் இறைவனைக் கண்டாரென்றும், சிவகோசரியார் இறைவனைக் கனவில் தான் கண்டாரென்றும் புராணங்கள் மூலம் அறியக்கூடியதாகவிருக்கின்றது. இதிலிருந்தே அறிவின் துணையிலும் உணர்வின் துணை கொண்டு, அதனை பின்பற்றுவதே உண்மையான சமய வாழ்வு என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகின்றது.

ஆனால் இன்று சைவர்களாகிய நாம் சைவம்

(6-ம் பக்கம் பார்க்க)

## மாவட்டசபைகளால் அவமானம் ஏற்படுமாம்

### திரு. ஜி. ஜி. கூறுகிறார்

அச்சுவேலி, ஞாயிறு

'எமது மொழிக்கு இலங்கை முழுவதிலும் சமமான அந்தஸ்துரிமை இருக்க வேண்டும். பெரும்பான்மை மக்களின் நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் வளர்த்து அந்தநல்லெண்ண மூலமாக உரிமைகளைப்பெற முயலவேண்டும். சிறுபான்மை பெரும்பான்மையான மக்கள் வாழும் இந்நாட்டில் சிங்களவம் தமிழ் பேசும் மத்தியில் நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் உருவாக்கி ஒற்றை ஆட்சிமுறை அமைக்க முயலவேண்டும். இவ்வாறு அமைந்தால்தான் இலங்கை பூராகவும் உள்ள தமிழன் தன்மானத்துடன் வாழ முடியும். இதைவிடுத்து கிராம சபை அந்தஸ்துக் கூட இல்லாத மாவட்டசபை ஒன்று உதயமாகி வருவது தமிழினத்துக்குப் பேரிழுக்கையும் அவமானத்தையும் ஏற்படுத்தி விடும். எனவே எனது கட்சியும் நானும் வலுவான முறையில் ஆணித்தரமாக எதிர்க்க முன்வந்துள்ளோம்.'

இவ்வாறு ஆவரங்கால் சிவன்கோவிலுக்கு அருகாமையில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

மாவட்டசபை உருவாகினால் ஒரு மாகாணத்தில் தான் நமது தாய்மொழியில் அலுவல்கள் யாவும் நடைபெறும் ஏனைய மாகாணங்

(6-ம் பக்கம் பார்க்க)

[தமிழ் மொழி 'அ' பாடத்திட்டத்திற்கான மாதிரி வினா விடைகளை 4-ம், 5-ம் பக்கங்களில் காணலாம்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இங்குள்ளஎதுவும் உமக்கு சொந்தமல்லஎன்ற உண்மையை மறக்காதீர். நீங்கள் உள்ளிட்டு எல்லாமே இறைவனின் உடைமை. 'எனது— 'எனது' என்பது அகந்தையின் அறிகுறியே.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANAD
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் கிலகவருஷம் சித்திரைமாதம்31ந் திகதி (13-5-68)

## தொழில் நுட்பக் கல்லூரி

மூன்று லட்சம் ரூபா செலவில் வடபகுதியில் ஒரு சிரேஷ்ட தொழில் நுட்ப கல்லூரியை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் இக்கல்லூரி அச்சுவேலியில் நிறுவப்பட விருப்பதாகவும் ஒரு செய்தி தெரிவிக்கிறது.

நமது கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்படவேண்டுமென்றும் தொழில்கல்விக்கே முக்கியத்துவமளிக்கப்பட வேண்டுமென்றும் பலவருடங்களாக யோசனை தெரிவிக்கப்பட்டு வருகிறது. கல்வி அமைச்சரும்கூட இன்றைய கல்வித்திட்டத்தை மாற்றி நமது நாட்டுக்கேற்ற கல்வித் திட்டமொன்றை உருவாக்குவதற்காக வெளிநாடுகள் பலவற்றில் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பி தொழில், பொதுக் கல்வி மசோதாவொன்றைத் தயாரித்திருக்கிறார். மசோதா வந்தாலும்சரி வராவிட்டாலும் சரி நமது நாட்டின் கல்வி முறையில் மாற்றம் ஏற்படத்தான் வேண்டும்; அதுவும் வெறும்நாற்காலி உத்தியோகத்துக்கு பிள்ளைகளைத் தயார் செய்யும் கல்விமுறைமாறி தொழில் துறையில் பிள்ளைகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டும் கல்வித் திட்டம் வரத்தான்வேண்டும். இதற்கு நாட்டில் பூரணவசதிகளையுடைய தொழில்நுட்பக் கல்லூரிகள் மாகாணத்துக்கொன்றாகவேனும் அமைக்கப்படவேண்டும். கொழும்பிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியோ கட்டுப்பட்டையிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரியோ நாட்டின் தேவையை நிறைவேற்றப் போதுமானவையல்ல. இவைதவிர யாழ்ப்பாணம் உட்பட சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிகள் ஒரளவாவது நல்ல பலனைத் தருவதாகவும் சொல்லமுடியாது.

யாழ்ப்பாணத்திலுள்ள கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியை விஸ்தரித்து பூரண வசதியுள்ள தொழில் நுட்பக்கல்லூரியாக்கத் தரவேண்டுமென்று பார்லிமெண்டிலும் வெளியிலும் பலர் கோரிக்கை விடுத்தனர். இங்கு விஜயம்செய்த கல்வி அமைச்சரும் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்று பார்வையிட்ட பின் அதை விஸ்தரித்து பூரண வசதியுள்ள தொழில்நுட்ப பயிற்சிக் கலாசாலையாக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்துச் சென்றிருந்தார்.

கல்லூரிகளும் உயர் தரக்கல்வி நிலையங்கள்பலவும் உள்ள யாழ்ப்பாண நகரில்தான் சகலவசதிகளுமுடைய தொழில் நுட்பப் பயிற்சிக்கல்லூரி இருப்பதுப்பயன்தரும். இப்போது அமைந்துள்ள கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி விஸ்தரிப்பதற்கும் இடவசதியுடையதாக இருக்கிறது. அச்சுவேலியில் புதிதாக ஓர் இடத்தைத் தேடுவதிலும் அதைப் பெற்று அதில் புதிதாகக் கட்டிடம் அமைப்பதிலும் செலவு அதிகரிப்பதுடன் வீண் காலதாமதமும் ஏற்படக்கூடும். புதிதாக ஒரு சிரேஷ்ட தொழில் நுட்ப பயிற்சிக் கல்லூரியை அமைப்பதைவிட இப்பொழுதிருக்கும் கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையை விஸ்தரித்து சகல வசதிகளையும் கொண்ட தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரியாக்குவதே சுலபமும், விரைவில் செயல் படக்கூடியதும், அதிக பயன்தரக் கூடியதுமாகும்.

"அச்சிட்டு வெளியிட்டு

# சமய நூல்களைப் பாதுகாக்க வேண்டும்"

— தத்புருஷதேசிகர்

உடுப்பிட்டி, ஞாயிறு

"கோவில்களில் திருவிழாக்கள் செய்வது எப்படி இன்றியமையாததோ அதுபோலவே சமய நூல்களை அச்சிட்டு வெளியிடவேண்டும். அத்துடன் சமய நூல்கள் அருகிமறைந்துவிடாமல் அவற்றைப் பேணிப் பாதுகாக்கவேண்டும். வடமொழியில் ஆண்டவன் வேதம் மூலம் சொல்லிய கருத்துக்களையே இறைவனின் நாலுவர்களாகத் தோன்றிய சமயகுரவர்கள் தேவாரங்கள் மூலம் தமிழில் தெளிவுபடுத்தியுள்ளனர். தேவார திருவாசகங்கள் எமக்குகிடைத்த விலைமதிப்பற்ற பொக்கிஷங்களாகும். பிறநாட்டினர் சொல்பவற்றையே நம்பி வாழும் இழிநிலை நீங்கினாலே சைவசமயம் ஒழுங்காக வளரும். குழந்தைப் பருவத்திலிருந்து எமது பிள்ளைகள் பிழையில்லாமல் தேவார திருவாசகங்களைப் படிக்கப் பழகவேண்டும்."

இவ்வாறு கரவை வெல்லவளிற் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவத்தில் தொடர்ந்து 7-ம் நாள் விழாவில் தமிழக தருமபுர ஆதீன வித்துவான் ஸ்ரீ தத்புருஷ தேசிகர் [இராமநாதன் செட்டியார்] ''தேவார திருவாசகங்கள்'' என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றுகையில் கூறினார். செல்வி ஜம்புநாதனின் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகிய இப்பிரசங்கத்தில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

சாத்திரங்களும், தோத்திரங்களும் சைவர்களுக்கு இருகண்கள் போன்றதென்றும், திருவாசகத்தில்வரும் 'கோகளி' எது என்பதில் தமிழ்நாட்டில் பல உரையாசிரியர்கள் வேறுபட்ட பல கருத்துக்களைக்கூறிக் குழம்புகின்றனர். ஆனால் ஈழத்தவர்கள் திருக்கேதீஸ்வரம் தான் என்று வாதிக்கின்றனர். இதனால் பல உரையாசிரியர்கள் இருந்தும் எவ்வித பயனும் கிடைக்கவில்லையென்றும், தேவார திருவாசகங்களை வாழ்க்கைக்குரிய நூலாக்க வேண்டுமென்றும் ஸ்ரீ தத்புருஷ தேசிகர் குறிப்பிட்டார்.

## 10 புதிய திட்டங்கள்

கொழும்பு ஞாயிறு

நீர்ப்பாசனப்பகுதி நடுத்தர அளவிலான புதிய திட்டங்களைப் பொறுப்பேற்றுள்ளது. 58 தொடர்ச்சியான வேலைத்திட்டத்துடன் இப்புதிய 10 திட்டங்கள் இப்போது கவனிக்கப்படுகின்றன.

## உற்பத்தி அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

பரந்தன் ரசாயனக் கூட்டுத்தாபனம் உள்ளூர் தேவைகளைப் பூர்த்திசெய்ய தனது உற்பத்தியை அதிகரிக்கும். தீக்குச்சி, எஃகு போன்றவற்றைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் முக்கிய தேவையான பாசிக திராவகம், உவரக திராவகத்தை இனிக் கூடுதலாக உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

[13 - 5 - 68]

சித்திரை மீ 31 உ

திங்கட்கிழமை

திதி - பிரதமை பகல் 4-25 மேல் துதிமை.

நட்சத்திரம் - அநுஷம். இரவு 1-16 மேல் கேட்டை.

ராகுகாலம்- 7-24—8-54.

சுபநேரம் - 11-54—1-24.

இன்று பிறந்தவர்களுக்கு — விளையாட்டு வீரர்களுக்கு இவ்வாண்டு சிறப்புமிக்கதாகும். கடல் கடந்து செல்லும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். தூரத்துச் செய்தி உங்களைத் திகைக்க வைக்கும். உறவினர் ஒருவர் சிறிது தொல்லை கொடுப்பார். உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும். எதிர்பாராத வரவும் உண்டு.

மேஷம்- உளவு வேலை தொடர்கிறது, உஷாராக இரு.

ரிஷபம் - விழியாலே மொழி பேசி விளையாட நன்று.

மிதுனம் - உறங்காத உள்ளம், ஊமைக் கண்ணீர்.

கடகம் - அமைதிக்கு அழைப்பு, அழகின் சிரிப்பு.

சிம்மம்-கடமைக்கு முதலிடம், கண்டிப்பும் உண்டு.

கன்னி- நிதி வசதி, உல்லாச வாழ்வு.

துலாம் - வேண்டாத கூட்டு, புத்தியைத் தீட்டு.

விருச்சிகம் - அவசர முடிவு, அமைதிக்கு வேட்டு.

தனுசு - சத்தான வாழ்வு, முத்தான நிகழ்ச்சி.

மகரம் - தென்றலும் தீதயாகமாறும், திருட்டு பயம்.

கும்பம் - வாகன விருத்தி, வாழ்விலும் திருப்தி.

மீனம் - இன்ப நாவிது. இனிது வாழ்வீர்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை.

ஆசிரியருக்கு கடிதம்!

## ஆலயப் பிரவேசம்

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக மகாத்மா காந்தி கூறிய பின்வரும் உபதேசம் மிகவும் விழிப்பூட்டுவதாகும்:

### ஹரிஜனங்களுக்கு காந்திஜியின் கடைசி வேண்டுகோள்

''ஓர் உண்மையான (ஹரிஜன்) பக்தன், கடவுள் ஒருவரைத் தவிர வேறு எவரது உதவியையும் நாடாத நந்தனாரின் அடிச்சுவட்டையே பின்பற்றுவான். உயர்ந்த சாதி என்று கூறிக் கொள்ளும் பிராமணன்கூட இன்று நந்தனாரைப் போற்றுகிறான்.'' இவ்வாறு அவர் இறப்பதற்கு முன் தினம் எழுதி சமீபத்தில் வெளியான 'ஹரிஜன்' பத்திரிகையில் வெளியான 'ஹரிஜனங்களும் ஆலயப் பிரவேசமும்' என்ற கட்டுரையில் மகாத்மாகாந்தி கூறுகிறார். காந்திஜிக்கு கிடைத்த ஓர் அநாமதேயக் கடிதத்துக்கு மறுமொழியாகவே இது எழுதப்பட்டது. அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

'மகர சங்கராந்தியன்று ஹரிஜனங்கள் ஆலயங்களுக்குச் செல்ல முயன்றனர். காலை 8 மணிக்கு அவர்கள் பஜனையுடன் சுவாமி நாராயணன் கோயிலுக்கு சென்றபோது கதவுகள் மூடிப் பூட்டப்பட்டிருந்தன. அவர்கள் அவ்விடத்திலேயே உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்கிறார்கள். அவர்கள் வேலைக்குப் போக மறுக்கிறார்கள். உள்ளூர் காங்கிரஸ் கமிட்டி அவர்களுடைய செயலைக் கண்டிக்கிறது. என்ன விபரீதம்! சுதந்திரம் கிடைத்தபின்பும் அவர்களுக்கு உரிமை கிடைக்காவிட்டால் இனிமேல் எப்பொழுதுதான் கிடைக்கப் போகிறது. காங்கிரஸ்காரர் அங்கு சென்று சிறிது நேரம் தங்கிவிட்டுப் போய்விடுகிறார்கள். கடுங்குளிரில் இருந்து கொண்டு பக்திப் பாடல்களைப் பாடும் ஹரிஜனங்களுக்கு உதவி செய்ய எவரும் தீவிரமான முயற்சி எடுக்கவில்லை. இதற்கென்ன முடிவு?''

### இக்கடிதத்துக்கு காந்திஜியின் மறுமொழி வருமாறு:

''எனது கருத்துக்களை நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருந்தும் ஹரிஜனங்களின் செயலை நான் பாராட்டுவதற்கில்லை. சத்தியாக்கிரகம் செய்பவர்கள் உண்மை பக்தர்களல்ல. அவர்கள் தேவதரிசனத்தை விரும்பவில்லை; தங்கள் உரிமையை விரும்புகிறார்கள். ஆகையால் அவர்கள் உண்மையான மதத்திலிருந்து பிரிந்துவிட்டார்கள். அநாமதேயமாகக் கடிதம் எழுதுவதோ அல்லது வேறு ஒருவரைக் கொண்டு எழுதுவிப்பதோ பக்தனுக்கு அழகல்ல. உண்மையான பக்தன், கடவுள் ஒருவரைத் தவிர மற்றவர்களின் உதவியை உதாசீனம் செய்த நந்தனாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவான். உயர்ந்த சாதி என்று கூறிக் கொள்ளும் பிராமணன்கூட இன்று நந்தனாரைப்போற்றுகிறான். ஹரிஜனங்களிடையே ஒரு நந்தனார் பிறப்பதை நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன். ஹரிஜனங்களும் அதை விரும்புவார்களென்று நான் நினைக்கிறேன். ஹரிஜனரல்லாத இந்து சமுதாயம் விரும்பினால் ஹரிஜனங்களை தக்க மரியாதையோடு கோயில்களுக்கு அழைத்துச் செல்லட்டும். அதுவரையில் ஹரிஜனங்கள் தங்கள் வீடுகளிலேயே தங்கியிருந்து பக்தியால் தங்களை சுத்தி செய்யட்டும். அவர்கள் கோயில்களுக்கு முன் உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்ய வேண்டியதில்லை. அப்படிச் செய்வது மேன்மையானதன்று-அதுசமய விரோதமானது. பாவமானது அது தவிர்க்கப்பட வேண்டும்''

எஸ். சிவசுப்பிரமணியம்,
கொழும்பு.

## நாட்டிலும் நகரிலும்

இரவில் நிலவில்லாத நாட்களில் 1 லட்சம் சதுர கிலோமீட்டர் விஸ்தீரணமுள்ள பூமிப் பிரதேசத்தை பூரண நிலவைக் காட்டிலும் இரட்டிப்பான வெளிச்சத்துடன் பிரகாசிக்கச் செய்யும் உண்மையான 'செயற்கை' ஒன்றை அமெரிக்கா தயாரித்து வருகிறதாம். 600 மீட்டர் விட்டமுள்ள ஒரு பிரமாண்டமான கண்ணாடியை சாதாரண ரொக்கட் ஒன்றில் பொருத்தி வானவெளியில் வலம்வர விடுவது. அது சூரிய வெளிச்சத்தை சந்திரன் போல பிரதிபலிக்கும். வியட்னாம் தேசத்தில் போரிடும் அமெரிக்க போர் வீரருக்கு இது உதவியாயிருக்கும் என்பதே நோக்கம்.

'அவசியமான தேவையே புதிய கண்டுபிடிப்புகளுக்கு தாய்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. மனிதரைக் கொல்லும் தொழில் ஓர் அவசிய தேவை என்று வைத்துக் கொண்டால் இப்புதிய கண்டுபிடிப்பு மனித குலத்துக்கு அவசியம் தேவைதான்.

இதனால் மற்றவர்களுக்கு என்ன கெடுதி வந்தாலும் யார் கேட்கப் போகிறார்கள்?

ஆனால் வியட்னாமுக்குப் பக்கத்தில் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் கம்போடியா கேட்டேவிட்டது.

இத்திட்டம் சண்டையில் ஈடுபடாத பிற மனிதரையும் பயிர் செடிகளையும் பாதிக்கக் கூடுமாதலால் அதை நிறுத்தி வைத்திருக்கும்படி அமெரிக்க அரசாங்கத்தைக் கேட்கும்படி அமெரிக்காவிலுள்ள கம்போடிய ஸ்தானிகர் ஐ. நா. சபைக் காரியதரிசி ஊதாண்ட்டுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

விஞ்ஞானம் மனிதனுக்கு நன்மையும் செய்கிறது. தீமையும் செய்கிறது இரண்டாவது உலக யுத்தத்தில் மனிதரைக் கொல்வதற்கும் நகரங்களை அழிப்பதற்கும் ஹிட்லர் உபயோகித்த வி1, வி 2 ஏவுகணைகள் யுத்தம் முடிந்தபின் விண்வெளியையும் சந்திரன், செவ்வாய் முதலிய கிரக மண்டலங்களையும் ஆராயும் உபகோளங்களாக பரிணமித்தன, ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களை சுட்டுப் பொசுக்கிய அணு சக்தி இன்று பற்பல துறைகளில் மனிதனுக்கு உபயோகமான முயற்சிகளில் உதவியாயிருக்கிறது.

வியட்னாமில் சண்டை போடுகிறவர்களுக்கு உதவியாக இராவைப் பகலாக்க முயலுகிறார்கள்.

ஆனால் இதே வேலையை ஜப்பானில் ஆக்க வேலைக்கு பயன்படுத்துகிறார்கள். இதை ஓர் அன்பர் என்னிடம் தெரிவித்தார்.

அங்குள்ள கோழிப்பண்ணைகளில் முட்டையிடும் கோழிகளை ஓர் இருட்டறைக்குள் விட்டுவிடுகிறார்களாம் வேண்டிய நேரத்தில் மின்சார விளக்குகள் மூலம் பகல் போலாக்கிவிடலாம். இப்படி ஆறு மணி நேரம். தொடர்ந்து ஆறு மணி நேரம் இருட்டு. மறுபடியும் ஆறுமணி பகல் வெளிச்சம். ஆகவே 24

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தை இன்று ஆரம்பமாக உடன்பாடு

## அமெரிக்கா, வட வியட்னும் மட்டும் கலந்து கொள்ளும்

### ஆங்கிலம், வியட்னுமிய மொழி உபயோகிக்கப்படும்

பாரிஸ், மே 12

**சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தை நாளை இங்கு ஆரம்பமாவதற்கான உடன்பாடு இருதரப்பினரிடையேயும் ஏற்பட்டுள்ளது**

அதிகார பூர்வமான பேச்சுவார்த்தை என இப்பேச்சுவார்த்தையை அழைப்பதென்ற முடிவுடன், மற்றும் சில உடன்பாடுகளுடனும் நாளை பாரிஸில் வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகவிருக்கிறது.

நேற்று முன்தினம் ஆரம்பமாகவிருந்த வியட்னும், அமெரிக்கப் பிரதிநிதிகளின் வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தை சில பிரச்னைகள் காரணமாக ஆரம்பமாகவில்லை.

### வேறு நாடுகள் கலந்துகொள்ளாது

நாளை ஆரம்பமாகவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் அமெரிக்காவும், வட வியட்னும் மட்டுமே கலந்துகொள்வதென்று நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

அமெரிக்க, வட வியட்னும் பிரதிநிதிகளைத் தவிர போரில் சம்பந்தப்பட்டுள்ள வேறு எந்த நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளக்கூடாது என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

### ஆங்கிலமும் வியட்னுமிய மொழியும்

சமாதானப் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளை இருதரப்பினரும் எந்த மொழியில் நடத்துவதென்ற பிரச்னைக்கும் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. ஆங்கிலமும் வியட்னுமிய மொழியும் பேச்சுவார்த்தையின்போது இடம்பெறும். பிரெஞ்சு மொழி நடைமுறையிலிருக்கும்.

பேச்சுவார்த்தைகள் நாளை ஆரம்பமாகும் போது உலகத்தின் பல பகுதிகளிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளின் நிருபர்களும், படப்பிடிப்பாளர்களும் அனுமதிக்கப்படுவர். அமெரிக்கா சார்பான பத்திரிகை நிருபர்களுக்கு அளிக்கப்பட்ட வசதிகள் தமது தரப்புப் பத்திரிகை நிருபர்களுக்கு வழங்கப்படவில்லையென்ற வட வியட்னும் பிரதிநிதிகளின் குறைபாடு நேற்றைய ஆலோசனைக் கூட்டம் மூலம் தீர்க்கப்பட்டுத் தெரிவித்த குறைகள் நிவர்த்திசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## 'பதினொரு படைகளை அழித்துவிட்டோம்'

### வட வியட்னும் அறிவிப்பு

லண்டன், மே. 12

வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் சைக்கோனிலும், சைக்கோனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கடும்சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வியட்காங் படைகள் 11 தென் வியட்னும், அமெரிக்கப் படைகளை அழித்துவிட்டதாக வட வியட்னும் அறிவித்துள்ளது. வியட்காங் படைகள் முகாமிட்டிருக்கும் பகுதிகளில் அமெரிக்க விமானங்கள் கடும் தாக்குதல் நடாத்துவதாகவும், கடந்த 5 நாள் போரில் 600 வட வியட்னும் துருப்புகளும், 14 அமெரிக்க துருப்புகளும் கொல்லப்பட்டதாக அமெரிக்க தரப்பு கூறுகிறது.

## சிங்கப்பூரில் அண்ணு

சிங்கப்பூர், மே 12

அமெரிக்கா, ஜப்பான் சுற்றுப் பயணங்களை முடித்துக் கொண்டு தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை சிங்கப்பூர் வந்து சேர்ந்துள்ளார். அவர் சிங்கப்பூர் விமான நிலையத்தை நள்ளிரவு வந்தடைந்த போதும், அவரை வரவேற்பதற்காக நூற்றுக்கணக்கானேர் வருகைதந்திருந்தனர்.

ஜப்பானிலிருந்து ஹாங்கொங்சென்று தங்கியிருந்து இங்கு வந்து சேர்ந்த திரு. அண்ணுதுரை, தனது சிங்கப்பூர் விஜயம் தனிமுறையிலானதெனத் தெரிவித்தார்.



திரு. அண்ணுதுரை விமான நிலையத்தில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில், சென்னையில் எஃகு ஆலையொன்றை நிறுவுவது குறித்து ஜப்பானில் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருப்பதாகவும், அதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும், மத்திய அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்பே இதுபற்றி மேலும் சொல்லலாம் என்று தெரிவித்தார்.

சிங்கப்பூரிலுள்ள தனது பழைய நண்பர்களை சந்திப்பதே சிங்கப்பூருக்கு வந்த தன் முக்கிய நோக்கமென்று அண்ணு தெரிவித்தார் திரு. அண்ணுதுரையின் பழைய நண்பர்கள் பலரும் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்.

## தி. ஜ. ர. வுக்கு பொற்கிழி

சென்னை, மே.12

பிரபல தென்னக எழுத்தாளரும் 'மஞ்சரி' சஞ்சிகையின் ஆசிரியருமான தி. ஜ. ர. வுக்கு பொற்கிழி வழங்கி அவரது இலக்கிய சேவையை கௌரவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. திரு. ஏ. வி. மெய்யப்பன், பழனியப்பா பிரதர்ஸ் எஸ். எம். பழனியப்பா தமிழ்ப் புத்தகாலயம் கண முத்தையா முதலியோர் அடங்கியுள்ளனர். இந் நிதிக்குப் பொருள் வழங்க விரும்புவோர் திரு அழ வள்ளியப்பாவுக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், திங்கள்

மயிலிட்டிக் கிராமசபைக்கான தேர்தல் இம்மாதம் 23-ம் திகதியும், தெல்லிப்பழைக் கிராமசபைக்கான தேர்தல் இம்மாதம் 25-ம் திகதியும் நடைபெறவிருக்கின்றன. [கா. நி.]

## நூலகக் குழு

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடிப்பட்டின சபையின் பொதுசன நூல் நிலையத்தின் நூலகக்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:-

பண்டிதர் திரு. க. வீரகத்தி, திரு. நா. சண்முகநாதன் [யாழ்வாணன்] சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம், வடமராட்சி விளையாட்டு அதிகாரி திரு. கே. கார்த்திகேசு, ஆசிரியர் திரு. எஸ் இரங்கநாதன். இவர்கள் ஐவரும் நெல்லியடிப் பட்டின நூலகப் பொறுப்பாளர் திரு. சி. கணேசானந்தனின் சிபார்சின் பேரில் நெல்லியடிப் பட்டின விசேட ஆணையாளர் திரு. சு. முருகவேலினுல் நியமனம் செய்யப்பட்டனர்.

"அமெரிக்காவின்

## வஞ்சகவலைக்குள் ஹனேய் விழுந்துவிட்டது'

### சூ-என்-லாய் கூறினுராம்

ஹாங்ஹாங், மே 12

'அமெரிக்கா விரித்த வஞ்சக வலைக்குள் ஹனேய் விழுந்துவிட்டது' என்று கூறினுராம் சீனப் பிரதமர் சூ- என்-லாய்.

வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காக பாரிஸ் நோக்கிவந்த வட வியட்னும் தூதுகோஷ்டித் தலைவர் கேர்ணல் ஸுவான்துவி சீனுவில் சிறிது நேரம் தங்கியிருந்த சமயம் சூ-என்-லாயைச் சந்தித்துப் பேசினுராம். அப்பொழுது சூ, ஸுவானிடம் இப்படியாகக் கூறினுராம்.

'மாவோ'

**மறுத்துவிட்டார்**

சீனத்தலைவர் மா-சே-துங் வட வியட்னும் பிரதிநிதியைச் சந்திக்க மறுத்துவிட்டாராம்.

'அமெரிக்கா நடத்தும் நாடகத்தில் முக்கிய கட்டம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு ஹனேய் பலியாகத் தொடங்கிவிட்டது' என்று வட வியட்னும் பிரதிநிதியைப்பார்த்துச்சொன்னுராம் சூ-என்-லாய்.

## ஹரியானு இடைத்தேர்தல்

புதுடில்லி, மே 12

ஹரியானு சட்டசபை அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான இடைத் தேர்தல் இன்று காலை ஆரம்பமானது. 41 சட்டசபை அங்கத்தவர்களை தேர்ந்தெடுப்பதற்கு இன்று பொதுமக்கள் வாக்களிக்கிருர்கள். மிகுதி 40 அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிப்பு செவ்வாயன்று நடைபெறும்.

இந்த இடைத் தேர்தலில் காங்கிரஸ் மூழு இடங்களுக்கும், ஜனசங் 44 இடங்களிலும், சுதந்திரா 33 இடங்களிலும் போட்டியிடுகின்றன. 281 சுயேச்சையாளரும் போட்டியிடுகின்றனர்.

## காந்தி வீதி

கெய்ரோ, மே 12

மகாத்மா காந்தி நூற்றுண்டு விழாவை யொட்டி கெய்ரோ நகரிலுள்ள வீதியொன்றுக்கு மகாத்மாகாந்தியின் பெயர் சூட்டப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## சோவியத் வாழ்த்து

வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றி பெற வேண்டுமென சோவியத் யூனியன் வாழ்த்துத் தெரிவித்துள்ளது. சோவியத் பத்திரிகை 'பிராவ்டா'வில் வட வியட்னும், அமெரிக்க பேச்சுவார்த்தை வியட்னுமில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது.

கல்யாண பந்தலில் தீ

## மாண்டவர் தொகை: 68

விஜயவாடா, மே 12

விஜயவாடாவுக்கருகே கேஸிவாரிக் கிராமத்தில், கல்யாணப் பந்தலில் பிடித்த தீக்கு மாண்டவர் தொகை 60 லிருந்து 68 ஆக உயர்ந்துள்ளது. இவர்கள் எண்மரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் இறந்தனர். 9 பேர் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையிலிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## 'மாற்று இருதய' வைத்திய மாநாடு

லண்டன், மே 11

மாற்று இருதய வைத்திய நிபுணர்களின் முதலாவது மாநாடு ஜெனிவாவில் அடுத்த மாதம் 13-ந் திகதி [illegible] மாற்று இருதய சிகிச்சையில் அடைந்த வளர்ச்சி மேலும் அடையவேண்டிய முன்னேற்றம் பற்றி இவர்கள் இதில் ஆராய்வார்கள். இதில் பிரபல நிபுணர் டாக்டர் பர்ணுட்டும் கலந்து கொள்வார்.

## பாரதியார் வசித்த வீடு

புதுவை, மே.12

புதுவை ஈசுவரன் தெருவில் மஹாகவி பாரதியார் வசித்து வந்த வீட்டை அரசாங்கம் வாங்க வுள்ளது இதற்கென 25 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக கல்வி நிதி மந்திரி காங்கேயன் அறிவித்துள்ளார். இவ் வீட்டில் பாரதியாரின் நூல்கள், நூலகம் அமையும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி-குருநகர் மீனவர் பிரச்னை: தனிநபர் கமிஷன் விசாரித்தது

காங்கேசன்துறை, ஞாயிறு

''குருநகர் மீனவர் தென் மேற்கில மீன்பிடிப்பதற்கு மயிலிட்டிதான் வளமாகவுள்ளது. ஆழ்கடலில் மீன்பிடிப்பவர்கள் எல்லா ஊர்களுக்கும் மாறிமாறி காலத்திற்குக் காலம் சென்று மீன் பிடிக்கிறார்கள்'' என்று கைத்தொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட தனிநபர் கமிஷனின் இறுதி நாள் விசாரணையின் போது நேற்றுச் சாட்சியமளித்த யாழ்ப்பாண மாவட்ட மீன் பிடி இலாகா அதிகாரி திரு. எஸ். குணநாயகம் தமது சாட்சியத்தில் கூறினார். கமிஷனர் திரு என் கிருஷ்ணதாசன் விசாரணைகளை நடத்தினார். மயிலிட்டி- குருநகர் மீனவரிடையே தொழிலடிப்படையில் நிலவும் தகராறு பற்றி விசாரிப்பதற்கென இக்கமிஷன் நியமிக்கப்பட்டது.

மயிலிட்டி மீனவர்கள் சார்பில் வழக்கறிஞர் திரு. வேலும்மயிலும் ஆஜரானார் குருநகர் சார்பில் நியாயவாதி திரு. எஸ். சுந்தரலிங்கம் வழக்கறிஞர் திரு. ஏ. அன்ரனியின் உதவியுடன் ஆஜராகியிருந்தார்.

சேந்தாங்குளவாசியான திரு. அ. ஆசிர்வாதம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''எம்மிடம் இயந்திரப் படகு இல்லை. நாம்சிறுதொழிலே செய்பவர். சேந்தாங்குளத்தில் 25 மீனவர் குடும்பங்கள் உள்ளன. நாம் மீன்பிடிக்கும் இடங்களில் குருநகர் மீனவர் வந்து தொல்லை கொடுக்கிறார்கள்.

இளவாலையைச் சேர்ந்த திரு. அருளானந்தம் என்பவரும் சாட்சியமளித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்றவிசாரணையின்போது மயிலிட்டியை அடுத்த ஊறணியைச்சேர்ந்த திரு. அந்தோனிப்பிள்ளை என்பவர் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:

''எமதுகிராமத்தில் 80க்கு மேற்பட்டோர் கட்டுமரங்களில் சென்று சிறுதொழில் செய்கின்றோம். கட்டு மரமின்றித் தொழில் செய்வோரும்உளர். நாம்சிறுதொழில் செய்யுமிடங்களில் குருநகர் மீனவர்தமது இயந்திரப் படகுகளைக் கட்டுகின்றார்கள். முருகைக் கடலுக்குள் இயந்திரப்படகு வந்தால் தொழில் பாதிக்கப்படும். ஆழ்கடலில் தொழில் செய்பவர்களால் சிறுதொழில் சரிபாதி குறைந்துள்ளது. எமதுவலைகளைக் கண்டாலும் கூட அலட்சியமாக குருநகர் மீனவர்கள் தமதுபடகினால் அவற்றை அறுத்துச் செல்கின்றனர்''

திருவாளர்கள் வேலுப்பிள்ளை, யோ. நீக்கிலாப்பிள்ளை மயிலிட்டிவாசியான திரு கணபதிப்பிள்ளை ஆகியோரும் அன்று சாட்சியமளித்தனர்.

## காரைநகர் நவீன தபால் நிலையம்

யாழ்ப்பாணம், திங்கள்

காரைநகரில் ஒருலட்சத்து 85 ஆயிரம் ரூபா செலவில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு ஒப்பந்தமும் செய்யப்பட்ட நவீன தபால் நிலைய வேலைகள் இன்னமும் தொடங்கப்படவில்லையாம்.

ஒப்பந்தம் செய்யப்பட்டு 6மாத காலமாவதால்திட்டமிட்டபடி இக்கட்டிடம் குறித்த கால எல்லைக்குள் கட்டி முடிக்கப்படுமா என இப்பகுதி மக்கள் சந்தேகப்படுகின்றனர் என காரைநகர் பொதுநலச்சங்கக்காரியதரிசி திரு. எஸ். செல்லத்துரை தபால்பகுதியின் தலைமைப் பீடத்துக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுள்ளார். [வி. நி]

''கள்தொழிலாளர்

## ஒன்றுபட்டுப் போராடவேண்டும்

யாழ்ப்பாணம், திங்கள்

வட இலங்கையில் அமுலில் இருந்து வரும் மரவரி முறையில் பல ஊழல்கள் இருப்பதுடன் தொழிலாளர்களுக்குப் பாதகமான சட்டங்கள் நடைமுறையிலுள்ளதாகவும். இச்சட்டங்களைப் பயன்படுத்திப் பொலிசாரும் கலால் அதிகாரிகளும் தொழிலாளர்களைத் துன்புறுத்தி வருவதாகவும் மரவரி முறையில் தொழிலாளர்களைப் பாதிக்கும் சட்டங்களை நீக்குவதற்குத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுப் போராட்டம் நடத்த வேண்டும் என்றும் வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாக சபையில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் 26-ம் திகதி யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சங்கத்தின் 35 வது மகாநாட்டில் மரவரி முறையை நீடிக்க வேண்டுமென்றும், தொழிலாளருக்குள் கஷ்டங்களும் மற்றும் ஊழல்களும் ஒழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தைக்கேட்பதென்று கோரும் தீர்மானங்கள் வரவிருக்கின்றன.

## பொலிஸ் அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், திங்கள்

மாணவருக்கும் குறைந்த வயதினருக்கும் கள் விற்பனை செய்யும் யாழ்ப்பாணத்திலுள்ள கள் விற்பனவு நிலையங்கள்மீது கடும் நடவடிக்கைமேற்கொள்ளப்படுமென்ற வடபகுதி பொலிஸ் அதிபரின் அறிவித்தலைத் தொடர்ந்து இங்குள்ள கள்ளிறக்கும் தொழிலாளர் பீதியடைந்திருப்பதாக வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம் வடபகுதிபொலிஸ் அதிபருக்கு முறையிட்டதற்கு இதன்மூலம் பொலிஸாரால் நேரும் கஷ்ட நஷ்டங்கள் குறித்து உடனடியாகவே தமக்கு அறிவித்தால் தாம் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் அதிபர் கூறியுள்ளார்.

வடபகுதி கள் இறக்கும் தொழிலாளர் மாணவருக்கும் வயது குறைந்தோருக்கும் கள்விற்பனை செய்வதில்லையென்று, புதிய அறிவித்தலைத் தொடர்ந்து கள்விற்பனை நிலையங்களைச் சோதனையிடும் பொலிஸார் கள் வைத்திருக்கும் பாத்திரங்களை. உடைத்தல் முதலிய தொழிலுக்கு நஷ்டம் விளைவிக்கக்கூடிய செயல்களில் ஈடுபடக்கூடுமெனத்தாம் அஞ்சுவதாகவும் சங்க சார்பிலபொலிஸ் அதிபரை நேற்றுச் சந்தித்துப்பேசிய சங்கச்செயலாளர் திரு. எம். வி. சுப்பிரமணியம் கேட்டுக்கொண்டார்.

அத்துமீறும் செயல்களில் பொலிஸார் ஈடுபட்டால் உடன் தமது கவனத்துக்குக் கொண்டுவந்தால் தாம் நடவடிக்கை மேற்கொள்வதாக பொலிஸ் அதிபர் உறுதியளித்தார்.

## வீதி திருத்தப்படுகிறது

உடுப்பிட்டி, ஞாயிறு

பலவருட காலமாகக் கவனிப்பாரற்றுக் குழியும் மேடுமாகக் காணப்பட்ட தம்பசட்டி வீதி [illegible] வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. முற்றாகப் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு மோசமடைந்திருந்த இவ் [illegible] களைத் தொடர்ந்து சீர்திருத்தப்பட்டுவருகிறது.

## கீரிமலைக் கேணி நவீனமயமாகும்

அளவெட்டி, ஞாயிறு

கீரிமலைக்கேணி நவீனமயமாக இருக்கிறது- தற்போது கீரிமலைக்கேணியில் நிலவும் சீர்கேடுகளைப் போக்க தெல்லிப்பழைக் கிராமசபையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

உல்லாசப் பிரயாணிகள் வசதியாக நீராட நவீனவசதிகள் அமைத்த கேணியாகக் கீரிமலையை ஆக்குவதற்கு தெல்லிப்பழைக் கிராமசபை நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிய வருகிறது.

## மாணவர் சுற்றுப் பிரயாணம

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்புத்துறை சென். ஜோசப் கல்லூரி மாணவர்கள் வித்துவான் திரு. ச. சி. ஞானப்பிரகாசம் தலைமையில் பஸ் மூலம் இலங்கைச் சுற்றுப் பிரயாணத்தைமேற்கொண்டுள்ளனர்.

சுமார் 125 மாணவர்கள் அடங்கிய இக்கோஷ்டியினர் ஒருவார காலத்தில் இலங்கையின் முக்கிய சரித்திர சம்பந்தமான இடங்களையும் ஆராய்ச்சி நிலையங்களையும் சென்று பார்வையிடுவர். [வி. நி

## ''இடமாற்றத்தினால் பாதிப்பு''

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

''இடமாற்றங்கள் காரணமாக வடபகுதி பாடசாலைகள் பாதிக்கப்படுவதை நாம் நேரடியாகப் பார்த்துணரக் கூடியதாயுள்ளது. நிலைமை மோசமடைந்து இன்றைய உயர்தர பாடசாலைகள் தரம் குறையுமுன் அவற்றின் தரத்தைப்பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல் அவசியம்'' என உரும்பராய் இந்துக்கல்லூரியிலிருந்து மட்டக்களப்பு கோட்டைமுனை மகாவித்தியாலயத்துக்கு மாற்றலாகியுள்ள திரு. வி. சுந்தரலிங்கத்துக்கு அளித்த பிரிவுபசார விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. எஸ். ஐயாத்துரை கூறினார்.

திரு. இ. நவரத்தினம், திருமதி எம். நவரத்தினம், திரு. இ. யோகேஸ்வரன் ஆகியோரும் பேசினர்.

## ஆசிரியர்களும் வியாபாரமும்

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள் வியாபாரத் துறைகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடக்கூடாதென்றும், அவ்வாறு ஈடுபடுபவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கல்வித் திணைக்களச் சுற்று நிருபம் ஒன்று கூறுகிறது.

## நாணய சங்க நிர்வாகிகள்

அளவெட்டி, ஞாயிறு

வலிகாமம் வடக்கு நாணயச் சங்கங்களின் சமாஜ வருடாந்த கூட்டம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: கலாநிதி ஏ. நடராசா, உப தலைவர்; என். ஆர். முருகேசு, செயலாளர், ஏ. ரி. சுப்பிரமணியம், பொருளாளர்: ஏ. கந்தையா.

# தமிழ் மொழி

'அ' பாடத்திட்டம்

### மாதிரி வினாக்கள்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிக:
   - [i] கூட்டுறவு இயக்கம்பற்றிக் கட்டுரை எழுதுக.
   - [ii] ''விளையாட்டுக்காயினும் பொய் சொல்லாதே'' என்ற பழமொழியைப் பொருளாகக் கொண்டு ஒரு சிறுகதை எழுதுக.
   - [iii] காகிதத்தின் சுயசரிதையை எழுதுக.
   - [iv] சுதேச வைத்திய முறையே சிறந்ததென்பர் சிலர். மேலைத்தேச வைத்திய முறையே சிறந்ததென்பர் வேறுசிலர். இருபக்கத்து நியாயங்களையும் ஆராய்ந்து உமது கருத்தைத் தெளிவாகக் கூறுக.
   - [v] வெளிநாட்டில் இருக்கும் உம்முடைய நண்பரொருவருக்கு இலங்கையின் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களை விவரித்துக் கடிதம் எழுதுக.
   - [vi] நான் சர்வாதிகாரியானால்..... என்ற பொருள்பற்றிக் கற்பனைக் கட்டுரையொன்று வரைக.
2. பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:

நாடகங்களை வெற்றிபெற நடத்துவதில் பெர்னாட்ஷா பெருமுயற்சி எடுத்து வந்தார். அதற்காகவே நாடகங்களை எழுதுவதற்கு ஆன நேரத்தைவிட மிகுதியான காலத்தை ஒத்திகைகளை நடத்துவதிலும் பார்ப்பதிலுஞ் செலவிட்டார். சில வேளைகளில் வரிவரியாகப் படித்துச் சொல்லி நடிகர்களை ஒப்புவிக்கச் செய்தார். மற்றொருவழியும் மேற்கொண்டார். ஒரு நாடகத்தைத் தொடர்ந்து பல வாரங்கள் நடத்தி இறுதியில் கூட்டம் குறைந்து வருவாயும் இழந்து படூஉம் இழப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. சில வாரங்கள் மட்டுமே நடத்தி நிறைந்த கூட்டத்தைக் காண்பதிலும் இடம் இல்லை என்று திரும்பிச் செல்வோரைக் காண்பதிலும் ஷாவுக்கு மகிழ்ச்சி உண்டு. கூட்டம் நிறைய வேண்டும் என்பதற்காகவோ, விளம்பரம் செய்ய வேண்டும் என்பதற்காகவோ நல்லெண்ணம் பெற வேண்டும் என்பதற்காகவோ சிலர்க்கு அன்பழைப்பு அனுப்பிப் பணமின்றி நாடகம் பார்க்கச் செய்யும் முறையை ஷா கடிந்தார். ஒருமுறை தன் நாடகம் ஒன்றிற்கு ஷா சென்றிருந்தபோது மண்டபம் நிறைந்திருந்ததைக் கண்டார்; ஆனால் கணக்குவந்த போது மூன்றில் ஒரு பங்கிற்கே வருவாய்க் கணக்கு வந்ததை அறிந்தார். உடனே பொறுப்பாளருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார்: 'முழுக் கட்டணமும் செலுத்திய பிறகே என் நாடகத்தை ஒருவர் பார்க்க உள்ளே வர வேண்டும். இது தெளிவாக விளங்க வேண்டும். இப்படிச் செய்வதால் மூன்றில் ஒரு பங்கு மக்களே நாடகமண்டபத்தில் இருந்து நாடகம் நடந்தாலும் கவலையில்லை. பணம் கொடுத்து நாடகம் காண வரும் பெருமக்கள் ஒவ்வொருவரும் மூன்று இடங்களைப் பயன்படுத்தலாம் என்றும் அவற்றில் தங்கள் குடை, கோட், தடி, கால் முதலியவற்றை வைத்துக் கொள்ளலாம் என்றும் விளம்பரப்படுத்தலாம்' என்றுஎழுதினார்.

3. பின்வருஞ் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக:

குசேலர் கண்ணபிரானருளாற் கிடைக்கப் பெற்ற செல்வத்தைமீண்டும் எடுத்துக் கொள்ளும்படி வேண்டல்.

[i] அடியனே னுய்ந்தே னென்னு அங்கை யிரண்டுங் கூப்பி
முடிமிசை யேற்றி நின்று மூதறிவுடையோர் கொள்ளாக்
கொடியவிச் செல்வ மொன்றே குணிப்பரும் பவத்திற்கேது
படிவற வாயிலின்பம் பயப்ப தெட்டுணையுமின்றால்.

[ii] மனமொழி யுடல மென்ன வகுத்திடு கரணமூன்றுந்
தினமு நின்றிருவடிக்கே செலுத்து நாயடியே னிந்தக்
கனவெனுஞ் செல்வத் தாழ்ந்தோ களித்து நாள் கழியா நிற்பன்
உனதடியவர் பூந்தாளி லுறப் பணிந்துய்ந் தனிக்கி.

[iii] முன்னரே வெறுத்த வேண்டா இதுவென முனிந்து செல்வம்
பின்னர்க் கைக்கொள்வேனாகிற் பேரறிவுடைய னன்றே
அன்னது மன்றிக் கொண்ட விரதமு மழிந்தா னேனன்
தன்னர் நெஞ்சுடைய நீரார் நகைக்கு நானாகு நின்றேன்.

[iv] ஆதலாலைய விந்த அநித்தியச் செல்வம் வேண்டேன்
மேதக முன்னிருந்த மிடியதே யின்னும் வேண்டும்
காதலினடியார் வேண்டுங் காரியமளித்துக் காக்கும்
நீதயை புரிந் தென்னுள்ளக் கருத்தினை நிரப்பு கென்றான்.

- [i] செய்யுள்களின் பொருளைத் தொகுத்தெழுதுக.
- [ii] செல்வத்தினால் ஏற்படும் தீமைகள் யாவை.
- [iii] பின்வருஞ் சொற்றொடர்களைப் பிரித்தெழுதுக:— மூதறிவுடையோர், பயப்ப தெட்டுணையுமின்றால், கனவெனுஞ் செல்வத் தாழ்ந்தோ, குணிப்பரும்பவத் திற்கேது.
- [iv] தன்மை யொருமைவினைமுற்று, எதிர்மறை வினையெச்சம், தொழிற்பெயர், வேற்றுமைத்தொகை, பெயரெச்சம் என்பவற்றிற்கு, மேற்படி செய்யுள்களிலிருந்து ஒவ்வோர் உதாரணம் தருக

4. பின்வருஞ் சொற்களின் பொருள் விளங்குமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களிலமைத்தெழுதுக:—
   கொடுங்கோல். கரடுமுரடு, அவமானம், துணிவு, அவலநிலை, அநாகரிகம், நுண்ணறிவு. விநோதம், சான்று, சமூகம்.
5. பின்வரும் பழமொழிகளை விளக்குக:—
   - (i) தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்.
   - (ii) அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிர்தமும்.
   - (iii) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
   - (iv) பொன்னின் குடத்திற்குப் பொட்டிட வேண்டுமா?
   - (v) கற்றவனுக்குத் தெய்வமே துணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

யாழ்ப்பாணம் மாநகரசபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

1. 400 'கைதாங்கு' நாற்காலிகள் கொடுப்பதற்கு 29-5-68 நண்பகல் 12 மணி வரை யாழ்ப்பாணம், பதில் மாநகரசபை ஆணையாளர் கேள்விப்பத்திரங்கள் பெறுவார்.

2. 24-5-68 பிற்பகல் 3 மணிவரை என்னிடம்பெறக் கூடிய படிவங்களில் கேள்விப்பத்திரங்களை அனுப்ப வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளாக மேலுறையில் 'கைதாங்கு நாற்காலிகள் கொடுக்க கேள்விப்பத்திரம்' என்று எழுதப்பட்டிருக்கவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அல்லது எனது கந்தோரிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடலாம்.

5. கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் [திருப்பிக்கொடுக்கப்படும்] ரூ 50/-உம் கேள்விப்பத்திரப் படிவங்களுக்கு ரூ.5/-உம் இக்கந்தோரில் செலுத்தி ரசீது வாங்கிக் கொண்டு படிவங்களைப்பெறலாம். படிவப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

6. மேற்கொண்டு விபரங்களை கீழ்க்கையொப்பமிடுபவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வி. தங்கவேலு,
பதில் மாநகரசபை
ஆணையாளர்.

மாநகரசபைமண்டபம்,
யாழ்ப்பாணம்.
10-5-68. 713


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 13-5-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை—கே. வி. ஆத்மநாதசர்மா, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை—வண. பி. சி. டி. மேதர், 6-45 துதிப் பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 வீணை மனோரஞ்சிதம் லோகேஸ்வரன், 6 45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை — விவசாயச் செய்திகள், 7-30 நேயர்கேட்டவை, 7-45 "அன்பின் முடிவு" —அத்தியாயம் (14) எஸ். சிவஞானசோதி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 ஐக்கியநாடுகள் சித்திரம், 9-45 கலைக்கோலம்.



REGAL JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 P. M.
Richard Harris
in
PITILESS THREE

2-வது வாரம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜிகணேசன்
டி. ஆர். ராஜகுமாரி
நடிக்கும்
மனோகரா

ராணி
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.
கே. ஆர். விஜயா
நடித்த
விவசாயி

கிங்ஸ்லி மைலன் பிளாஸா
[கொழும்பு]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
ஜெய்சங்கர், எல். விஜயலக்ஷ்மி
மனோகர், ஷீலா, விஜயலலிதா
நடித்த
வல்லவன் ஒருவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
எம். ஆர். ராதா - பேபி ஷகிலா
நடித்த
பெற்றால்தான்



பிள்ளையா



## வரி விளம்பரம்

### தேவை

ஊதுபத்தி தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். ஆ. இராசையா அன் சன்ஸ் இன்டஸ்றீஸ், 40, சட்டநாதர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். 1538

நெசவாளர்

அனுபவம் உள்ள பெண் நெசவாளர்கள் தேவை. நேரில் சந்திக்கவும். "ஆனந்தி நெசவகம்", 33 சிவப்பிரகாசம்வீதி, வண்ணார்பண்ணை. 1539

### வாடகைக்கு

கடை

யாழ்ப்பாணம் K. K. S. வீதியில் 448-ம் இலக்கக் கட்டிடத்தில்முன்புலோன்றியாக இருந்தகடை காலியான நிலையில் உடனடியாக வாடகைக்குண்டு. மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு நேரில் வரவும். 1540

### கல்வி

ஜி. சி. ஈ. [சாதாரணம்] கீழ் வகுப்பு மாணவர்களுக்கும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் டியூஷன் அளிக்கப்படுகிறது. தொடர்புகொள்க: 22, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1541


கிரிக்கெட்

## கொழும்புக் கோஷ்டியை யாழ்பாணம் வென்றது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் 'பங்கலவ்வேஸ்' கோஷ்டிக்கும் கொழும்பு இளைஞர் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஒரு காரசாரமான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் கொழும்பை 6 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் 'பங்கலவ்வேஸ்' கோஷ்டியினர் சகல விக்கெட்டுகளையும் இழந்து 23 ஓட்டங்களையும், கொழும்பு இளைஞர் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 94 ஓட்டங்களையும் பெற்றனர். கொழும்பு இளைஞர் கோஷ்டியில் எஸ். தர்மலிங்கம் 23 ஓட்டங்களைப் பெற்றார். இக்கட்டத்தில் யாழ்ப்பாண வீரர் ஆர். ஸ்ரீதரன் அருமையாகப் பந்தெறிந்தார்.

2வது இனிங்ஸ் ஆட்டத்தில் பங்கலவ்வேஸ் சகல விக்கெட்டுகளையும் இழந்து 19 ஓட்டங்களைப் பெற்றது யாழ். கோஷ்டியில் எம். ஜெயரத்தினம் 40 ஓட்டங்களையும், கே. வேந்திரமூர்த்தி 23 ஓட்டங்களையும் பெற்றனர் இக்கோஷ்டியின் கப்டன் எஸ். திருநீலகண்டனும் மற்றும் சாம் செல்வரும் மிக நன்றாக ஆடினர்.

[வி. நி]

### உரும்பராய் வெற்றி

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

உரும்பராய் விளையாட்டுக் கழகத்துக்கும் இணுவில் சூட்டிங்ஸ்டார்ஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் உரும்பராய் கழகம் 18 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.


MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, & 9-45 P. M.
Today 10-30 Matine
CARRY ON SCREAMING


# தமிழ்மொழி

### விடைகள்

[i] செய்யுள்களின் பொருள்:

அடியேனாகிய யான் பிழைமுற்றேனென்று அழகிய கைகளிரண்டையும் குவித்து உச்சியின்மீது உயர்த்தி வணங்கியவனாய் நின்று பேரறிவுடையோர் மதிக்காத கொடிதாகிய இந்தச் செல்வம் ஒன்றுமே அளவில்லாத பிறவிகளுக்குக் காரணமாவது. எள்ளளவும் இன்பம் தருதலுமில்லையாம்.

மனம் வாக்குக் காயம் என்று வகுக்கப்பட்ட முக்கரணங்களையும் நாள்தோறும் உனது திருவடிகட்குச் செலுத்துகின்ற நாயினியல்புடைய அடியேன் உனதடியார்களின் தாமரைமலர்போலுந் திருவடிகளிற் பெரிதும் பணிந்துத்தலைவிட்டு, கனவுபோன்ற செல்வ வாழ்க்கையில் அழுந்திக் களிப்படைந்தோ வாழ்நாளைக் கழிப்பேன்.

முதற்கண்ணேயே வெறுப்புற்று இது வேண்டா எனத் தள்ளி அந்தச் செல்வத்தைப் பிறகு கைப்பற்றுவேனாயின் யான் பேரறிவுடையேனல்லேன்; அதுவுமன்றிமன் கொண்டுள்ள விரதத்தையும் அழித்தவனாவேன்; நல்ல மனமுடைய பெரியோர்களது நகைத்தலுக்கும் நாணுதவனாயிருக்கின்றேன்.

ஆகையால், ஐய, இந்தப்பொய்யாகிய செல்வத்தை விரும்பிடேன். மேன்மையுற முன்னிருந்த வறுமையே இன்னமும் வேண்டும்; அன்பினையுடைய அடியவர்விரும்புகின்ற காரியங்களை அருளிச்செய்து காக்கின்ற நீ கருணை செய்து என் மனக் கருத்தை நிறைவேற்றுகவென்றான்.

[ii] செல்வத்தினால் ஏற்படும் தீமைகளாவன:

[அ] அளவில்லாத பிறவிகளுக்குக் காரணமாவது

[ஆ] இன்பம் பயப்பதும் எள்ளளவுமில்லை.

[iii] முதறிவுடையோர் = முதுமை+அறிவு+உடையோர்.

பயப்பதெட்டுணையுமின்றால் = பயப்பது+எள்+துணை+உம்+இன்று+ஆல்.

கனவெனுஞ்செல்வத்தாழ்ந்தோ = கனவு+எனும்+செல்வத்து+ஆழ்ந்து+ஓ.

குணிப்பரும் பவத்திற்கேது = குணிப்பு+அருமை+பவத்திற்கு+ஏது.

[iv] தன்மை ஒருமைவினைமுற்று: உய்ந்தேன்.

எதிர்மறை வினையெச்சம்: நாணாது.

தொழிற்பெயர்: பயப்பது.

வேற்றுமைத்தொகை: நின்திருவடி [நினது திருவடி]

பெயரெச்சம்: கொண்ட [விரதம்]

4. கொடுங்கோல்:- புட்கரனுடைய கொடுங்கோல் ஆட்சியை மக்கள் வெறுத்தனர்.

கரடுமுரடு:- கரடுமுரடான பாதையிற் சென்றமையால் அவனது பாதங்கள் புண்பட்டன.

அவமானம்:- தான்செய்த பிழையின் பொருட்டு அவமானம் தாங்கமுடியாமல் அவன் தற்கொலை செய்து கொண்டான்.

துணிவு:- எந்தக்காரியத்தையும் செய்துமுடிப்பதற்கு மனத் துணிவு அவசியம் வேண்டும்.

அவலநிலை:- பாம்பின் வாய்ப்பட்ட தமயந்தியின் அவலநிலையைப் பார்த்து வேடன் அவளுக்கு உதவிபுரிந்தான்.

அநாகரிகம்:- அநாகரிகமான பழக்கவழக்கங்களுடையவர் எல்லாராலும் வெறுக்கப்படுவர்.

நுண்ணறிவு:- அரசன் நுண்ணறிவுடைய மந்திரிமாரை அரசவையில் வைத்திருந்தான்.

விநோதம்:- வாழ்க்கை விநோதங்களை அறிந்து உண்மைப் பொருளை நாடிச் செல்வர் பேரறிஞர்.

சான்று:- வள்ளுவரின் சிறந்த வாழ்க்கைநெறிக்கு அவரியற்றிய திருக்குறளே சான்று பகரும்.

சமூகம்:- சிறந்த அரசியல் நடைபெறும் நாட்டில் பல்வேறு சமூக மக்களும் ஒற்றுமையுடன் வாழ்வர்.

5. பழமொழிகளை விளக்குதல்:-

தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்:- இளமையிற் பழகியபழக்கம் இறுதிவரையும் நிற்கும்.

அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிர்தமும்:-பேச்சளவில் இனிமையும் செயலளவில் வஞ்சகமும்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்:- தருணத்தையறிந்து கருமத்தைச்செய்துகொள்

பொன்னின் குடத்திற்கு பொட்டிடவேண்டுமா:-அழகுக்கு அழகுசெய்யவேண்டியதில்லை.

திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை:- ஒருவருடைய உதவியுமில்லாதவனுக்குக் கடவுளேது ணைபுரிவார்.


பூஜைக்கு - அபிஷேகத்துக்கு
தேவையான
பொருட்கள்
கிடைக்குமிடம்:-
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
[புதுபஸ்நிலையத்துக்கு அருகாமை]
73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வியட்னும் பேச்சுவார்த்தை முடிவு

# சுயநிர்ணய உரிமையை பாதுகாக்க வேண்டும்"

## தென்வியட்னும் கூறுகிறது

சைகோன், மே 12

வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தை முடிவு தென்வியட்னுமின் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாப்பதாக இருக்கவேண்டுமென தென்வியட்னும் அறிவித்துள்ளது. கலப்பு அரசாங்கம் அமைப்பதை தென்வியட்னும் ஒருபொழுதிலும் ஏற்றுக்கொள்ளமாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டது.

கலப்பு அரசாங்கம் ஏற்படுவதை வியட்காங்கும் இப்போது ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்துள்ளது.

### முழு உடன்பாடு

கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி வடவியட்னும், அமெரிக்கா நாளை பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு முழுஉடன்பாட்டுக்கு வந்துள்ளதாக தெரியவருகிறது. பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையில் நடாத்தப்படுவதற்கான முழு ஏற்பாடுகளும் இப்போது செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

---

## வயோதிபர் இல்லங்கள்

### நிறுவ அரசாங்கம் உதவி அளிக்கும்

கொழும்பு ஞாயிறு

நாட்டின் பல பகுதிகளிலும் வயோதிபர் இல்லங்களை நிறுவுவதற்கு சமூக சேவைப்பகுதி தொண்டர் ஸ்தாபனங்களுக்கு உதவியளிக்கும்.

யாழ்ப்பாணம், கொழும்பு காலி, அநுராதபுரம் ஆகிய இடங்களில் மட்டும் இப்போது வயோதிபர் இல்லங்கள் இருக்கின்றன. நாட்டின் பல பகுதிகளிலும் வயோதிபர் இல்லங்களை நிறுவ தொண்டர் ஸ்தாபனங்களுக்கு உதவி அளிப்பதென்ற திட்டத்தில் ஒரு கிராம அபிவிருத்திசபைக்கு 70 ஆயிரம் ரூபாய் அரசாங்கம் அளித்துள்ளது.

---

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபையால் யாழ். திறந்த வெளியரங்கில் நடாத்தப்பட்டுவரும் பௌர்ணமி நாள் கலைவிழா நிகழ்ச்சிகளின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் இன்று இடம் பெறுகின்றன. இன்றைய விழாவில் கண்ணன் கோஷ்டியினரின் மெல்லிசையும், லீலா நாராயணனின் நடனமும் நவநாத விநோதன், திரு. பி. தியாகராசாவின் கச்சேரியும் நடைபெறும்.

திருமதி விமலா யோகநாதனின் நாட்டியாலய மாணவிகளின் நடன நிகழ்ச்சியும், வித்தி வனகரத்தினத்தின் மேல் நாட்டுப் பாணியிலான மெல்லிசையும், வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தினரின் 'எது நீதி' என்ற நாடகமும் விழாவில் இடம் பெறும்.

---

## சைவம்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்று சொல்ல அருகதையற்ற நிலையிலும், சைவத்தின் பெருமையைப் பற்றிச் சிந்திக்கவும் கூட சக்தியில்லாதவர்களாகவும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

பொறிபுலனை அடக்கினால் மட்டும் போதாது. மெய்யுணர்வும் வேண்டும். சமய வாழ்வு என்பது இரத்தத்தால் கலந்தது. உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தி, பக்திபரவசம் ஏற்படுத்துவதுதான் சமயம். சமயவாழ்வில் உறுதியோடு கலந்தவர்கள்தான் இதன் பெருமையை உணர்ந்தவர்களாவார்கள்.

திருநீறு, சந்தனம் பூசுவதனாலும், உருத்திராட்சம் அணிவதாலும், தண்டு கமண்டலம் தாங்குவவதாலும், பூஜைகள், அருச்சினைகள் செய்வதாலும், தேவார பாராயணங்கள்பாடி, கொடி மணி ஆலவட்டம் பிடிப்பதாலும், ஆசார சீலராய் திகழ்வதாலும் சைவம்வளர்ந்துவிடாது. நாமும் சமய வாழ்வு வாழ்ந்துவிடமுடியாது. தான்படைத்த கங்கை நீரையன்றி இரு துளி கண்ணீரால் தன்னை அர்ச்சித்து வணங்குவதையே இறைவன் விரும்புவான். ஆனால் இன்று நாம் உயிரைவிட்டுச் சடலத்தைப் பிடித்த கதைபோல் சைவர் என்று வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்நிலை மாறி நாம் எல்லோரும் 63 நாயன்மார்கள் வழியில் உண்மைச் சைவர்களாக, அந்த மார்க்கத்தில் சமய வாழ்வு வாழல் வேண்டும். (கா.நி.)

---

## மாவட்டசபை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் உள்ள தமிழர்கள் சிங்கள மொழியில் தான் தமது வேலைகளைச் செய்ய வேண்டும். அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

ஏனைய மாகாணங்களிலும் தமிழ்மொழி அருகி தனிச் சிங்களம் சரியான முறையில் நடைமுறைக்கு வந்துவிடும் இதனாலேதான் இலங்கை முழுவதிலும் தமிழனுக்கு தமிழ்மொழிக்கு அந்தஸ்து வேண்டும் என்று அன்றும் இன்றும் கூறிவருகிறோம்.

உடுப்பிட்டி எம். பி. யும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

வித்தியாலங்கார வித்தியோதயா பல்கலைக்கழகங்களை நிறுவியபோது அத்தகைய கலாசார அடிபடையான பல்கலைக்கழகம் ஒன்றை சைவ மதத்தினர் இஸ்லாமிய மதத்தினர் ஆகியோரின் நன்மை கருதி நிறுவிக்கொடுப்பதாக காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா கூறியதன் பிரகாரம் திரு. சு. நடேசபிள்ளை இராமநாதன் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவப்பிரதயத்தனப்பட்டார். இதற்கென திருமதி ஸ்ரீமாவோ ஆட்சியிலும் அடையாள மானியம் ஒதுக்கப்பட்டது.

இம்மானியம் வருடாவருடம் ஒதுக்கப்பட்டுவருகிறது. இவ்வாறு தொடர்ந்து இம்மானியத்தை ஒதுக்குவதால் தற்போதைய ஆட்சியினருக்கும் சம்மதம் என்பது பெறப்படும். இதை நிறைவேற்றுவதற்கு சகல தமிழ்ப் பிரதிநிதிகளும் ஒத்துழைப்புத்தர வேண்டும்.

வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில், தமிழினம் இழந்த உரிமைகள் யாவற்றையும் பெறவிரும்பினால் மாவட்ட சபைகளை ஏகோபித்து எதிர்க்கவேண்டுமென்றார்.

மாவட்டசபை சம்பந்தமாக ஒரேமேடையிலிவாதிக்க நாம் தயாராகவிருப்பதாகவும் திரு. சிவசிதம்பரம் கூறினார்.

திரு. தா. குணரத்தினமும் மற்றும் பலரும் பேசினர்.

---

## நாடக நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், திங்கள்

கவிஞரும் நாடகாசிரியருமான கரவை கிழான் எழுதிய "தணியாத தாகம்" என்னும் நாடகநூல் இம்மாதம் 18-ம் திகதி மன்னூர் — அடம்பனில் நடைபெறவிருக்கும் கலைவிழாவில் பி. ப. 5-30 மணிக்கு வெளியிடப்படும். வெளியீட்டுவிழாவில் மன்னூர் எம். பி. திரு. அழகக்கோனும் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும், மட்டக்களப்பு எம். பி. திரு. இராசதுரையும் வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கமும், கலையரசு க. சொர்ணலிங்கமும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

---

## 5 பிள்ளைகளின் தந்தை தற்கொலை

உடுவில், புதன்

ஐந்து பிள்ளைகளுக்கு தந்தையான முருகேசு சின்னராசா [வயது 42] என்பவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். இச் சம்பவம் சங்குவேலியில் நடைபெற்றது.

இறந்தவரின் தாயாரான முருகேசு அன்னமுத்து சாட்சியமளிக்கையில் தமது குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக பலகாலம் மன நிம்மதியின்றி தனது மகன் வாழ்ந்து வந்தார் என்றும் அவர் தனது மனைவி பிள்ளைகளுடன் பிரிந்து வாழ்ந்து வந்தார் என்றும் சுருட்டுத் தொழில் செய்து தனது மகன் தனது மனைவிக்கும் பிள்ளைகளுக்குமாக மாதம் 50 ரூபா ஜீவனாம்சம் கட்டி வந்தாரென்றும் மனக்கவலையும் கஷ்ட நிலையும்தான் மகனுடைய இந்த முடிவுக்கு காரணம் என்றும் மரணவிசாரணையின்போது சாட்சி கூறினார்.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

ஊர்காவற்றுறை' ஞாயிறு

காரைநகர் வாசியான இராமர் ஆண்டி ஐயா [வயது 50] என்பவர் குடும்பத் தகராறு காரணமாகக் கவலையடைந்து கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கந்தசாமி மரணவிசாரணை நடத்தினார். விசாரணையின் பின் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## நாட்டிலும் நகரிலும்

[12ம் பக்கத் தொடர்ச்சி]

மணி நேரத்தில் இரண்டு பகலும் இரண்டு இரவும் இருப்பது போல கோழிகளுக்குத் தெரிகிறதாம். இதன் பலனாக 24 மணித்தியாலத்தில் ஒரேஒருமுட்டை இடும் கோழி இப்பொழுது இரண்டு முட்டை இடுகிறது!

—வழிப்போக்கன்

---

நுணசை முருகமூர்த்தி தேர்விழா

# ஆயிரக்கணக்கானபக்தர்கள் கலந்து கொண்டனர்

அளவெட்டி, ஞாயிறு

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் இன்று நடைபெற்ற தேர்த்திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

இத் தேர்த்திருவிழாவில் பலதரப்பட்ட காவடிகள் காலைமுதல் மாலைவரை வந்தவண்ணம் இருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. சுமார் ஆயிரத்துக்கதிகமான காவடிகள் வந்திருந்தும் மாதகல் அரசடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து புறப்பட்டபறவைக்காவடி, பல ஆயிரம் பக்தர்கள் சூழ கோவிலை வந்தடைந்தது பார்த்தோரை மெய்மறக்கச்செய்தது. மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து புறப்பட்டு கோவிலைவந்தடைந்த தேர்க்காவடியும் மற்றும் ஆயிரத்தெட்டு வேல்கள் ஏத்திவந்த ஆட்டக்காவடி முக்கிய இடத்தைப் பெற்றன. இக்காவடிகளுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா நாகசுர, தவில்கலைஞர்களின் கான ஓசை இடம்பெற்றன.

பல பக்தர்களின் பஜனையுடனும் ஆண், பெண் பக்தர்களில் பரவச ஆட்டத்துடனும் தேர் முட்டியை வந்தடைந்த ஆறுமுகனுக்கு தேர் முட்டி மண்டபத்தில் வைத்து பிரமஸ்ரீ ந. நடராசக் குருக்கள், பிரமஸ்ரீ கு. காமாட்சிசுந்தரக் குருக்கள் ஆகியோர் உட்பட மற்றும் பல குருக்கள் பஞ்சமுக அர்ச்சனை செய்தனர். பின் ஆறுமுகன் நடனத்துடன் கோவிலை வந்தடைந்தார். அதன் பின் ஏராளமான பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இன்று பழமை வாய்ந்த இவ்வாலயத்தின் மேலை வீதியிலமைந்த கடம்ப விருட்சத்தையடுத்த தாமரைக்குளத்தில் இன்று காலை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

---

## நண்பனுக......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணத்திற்கு என்ன கொண்டு செல்வதாகக் கேட்டாராம் அதற்கு மணமகன் 2000 ரூபா பெறுமதியான இரு மோதிரங்களை கொண்டு செல்வதாகப் பெட்டியைக் காட்டினாராம்.

இதன்பின்னர் அனைவரும் நித்திரையில் மூழ்கியிருந்த சமயத்தைப் பயன்படுத்திக் கொண்ட நாகரிக உடையிலிருந்த திருடன் மணமகனின் பச்சைநிறப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கிளிநொச்சிப் புகையிரத நிலையத்தில் இறங்கி ஓடிவிட்டதாகவும் பளைப்புகையிரத நிலையத்தில் தூக்கம் கலைந்து எழுந்து மணமகனின் நண்பரொருவர் பெட்டியைக் காணாது திடுக்கிட்டு மணமகனை எழுப்பி விஷயத்தை தெரிவித்து இருவரும் பளை ஸ்டேஷனில் இறங்கி டெலிபோன் மூலம் கிளிநொச்சி ஸ்டேஷனுக்கு தகவல் கொடுத்ததாகவும் பின்னர் இருவரும் காரொன்றில் கிளிநொச்சிக்கு விரைந்துகொண்டிருக்கையில் எதிரே வந்த பஸ்ஸை மறித்துத் தேடியபொழுது பஸ் கண்டக்டர் கிளிநொச்சி பஸ் நிலையத்தில் குறிப்பிட்ட நபர் பச்சைப் பெட்டியுடன் நின்றதாகவும் இடமின்மையால் அவரைப் பஸ்ஸில் ஏற்றவில்லையென்றும் தகவல் தெரிவித்ததாகவும் உடனடியாகக் கிளிநொச்சி பஸ்நிலையத்திற்கு சென்றபொழுது பிரஸ்தாப நபர் காரை மறித்ததாகவும் அப்பொழுது காரிலிருந்து குதித்த மணமகனும் தோழனும் திருடனை பெட்டியுடன் பிடித்து கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பொலிசார் பெட்டியைத் திறந்து பொருட்களைச் சரிபார்த்த பின்னர் மணமகனிடம் ஒப்படைத்தனர், பெட்டிக்குள் இரு மோதிரங்களும் பத்திரமாக இருந்ததாம்.

---

## இந்து வாலிபர் சங்கம் உதயம்

யாழ்ப்பாணம், திங்கள்

கிராமங்களில் மக்களிடையே சமய வாழ்வைப் பிரசாரம்செய்யவும், தேவாலய புனருத்தாரண வேலைகளுக்கு உதவவும், கோவில் விழாக்களில் பங்குபற்றிச் சிறப்புற நடாத்தவும் யாழ்ப்பாணம் இந்து வாலிபர்சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கந்தர்மடம் பண்ணிசை மன்றத்தில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரியப்பட்டனர்.

போஷகர்கள்: ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராஜா, நல்லூர் தேவஸ்தான பரிபாலனகர்த்தா குகதாஸ மாப்பாண முதலியார், காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா, டாக்டர் கே. கனகரத்தினம், தலைவர் ஓய்வுபெற்ற மாவட்டநீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம், உபதலைவர்கள்: திருவாளர்கள் இ. வைத்தியலிங்கம், இ. நாகராஜா, தா. சிவபாதசுந்தரம், செயலாளர்: திரு. ஆ. துரைராஜசிங்கம், உபசெயலாளர்கள்: ந இரத்தினசிங்கம், மு. சிவலிங்கம் பொருளாளர்: திரு. எஸ். வேலுப்பிள்ளை, 10 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியொன்றும் தெரியப்பட்டது. [கா. நி]

---

## கோவிலில் வைத்து இளம்பெண் மறைவு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கோவில் வாசலில் படுத்திருந்த இளம்பெண் காணாமல் போய்விட்டாராம். யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த இந்த 19 வயது இளம்பெண் தன் தாயாருடன் தொண்டமானாறு செல்வச்சந்நதி ஆலய வாசலில் படுத்திருந்ததாகவும் விழித்துப்பார்த்த பெண்ணின் தாயார் தமது பக்கத்தில் படுத்திருந்த மகள் காணாமல் போய்விட்டதை அறிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. பிரஸ்தாப இளம் பெண் நீண்ட நாட்களாக நோயுற்றிருந்ததாகவும் இதன் காரணமாக கோவிலில் சில தினங்கள் தங்கியிருக்க தாய் தனது மகளை அழைத்துவந்ததாகவும் தெரியவருகிறது.

வல்வெட்டித்துறைப் பொலிசார் புலன்விசாரணை நடத்துகின்றனர்.

---

## தேர்த் திருவிழா

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்றுப் பகல் நடைபெற்றது.

இவ்விதழ் "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] கோவில் [illegible] அச்சகத்தில் 1968-ம் [illegible] மே மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org